RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 295 | அக்டோபர்.26 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சாதிவாரி கணக்கெடுப்பு: தமிழக முதல்வரின் தயக்கமும், கூட்டணிக் கட்சிகளின் மவுனமும் அன்புமணி சாடல்

சென்னை, அக்.26-

தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் ஸ்டாலின் தயங்கி கொண்டிருப்பது ஏன்? இது குறித்து முதல்வர் நிச்சயம் பதிலளிக்க வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் செய்தியாளர்களைச் சந்திக்கும்போது கூறியதாவது: தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் ஸ்டாலின் தயங்கிக் கொண்டிருக்கிறார். இது குறித்து நிச்சயமாக அவர் பதிலளிக்க வேண்டும். முதல்வர் தமிழகத்தில் சாதிவாரி கணக்கெடுக்கப்பு நடத்தாமல் இருப்பது தமிழக மக்களுக்கு செய்யக்கூடிய மிகப்பெரிய துரோகம்.

கர்நாடகா, பிஹார் உயர் நீதிமன்றங்களும், உச்ச நீதிமன்றமும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தலாம் என கூறிய பிறகும் முதல்வர் தயங்குவது ஏன்? சமூக நீதி எங்கள் பிறப்புரிமை, உயிர் மூச்சு என வசனம் பேசிக் கொண்டிருக்கும் முதல்வர் ஏன் இப்படி செய்கிறார். திமுக கூட்டணியில் உள்ள கட்சிகளும் இது குறித்து கேள்வி எழுப்பாதாது ஏன்?

பெரியார் வழியில் வந்த வைகோ இது குறித்து கேள்வி எழுப்பாமல், அழுத்தம் கொடுக்காமல் இருப்பது ஏன்? முதல்வரிடம் அழுத்தம் கொடுத்து சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டுமென திருமாவளவன் ஏன் அழுத்தம் தரவில்லை? சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால், சமூக நீதியை நிலைநாட்டலாம். பின்னர் வறுமை ஒழியும், சாதி பிரச்சினையே ஒழியும். கேட்டால் திராவிட மாடல் என்றார் சொல்வார்கள்.

அப்படி சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் அதிகளவில் பட்டியலின மக்கள் தான் பயனடைவார்கள். திருமாவளவன் ஏன் இன்னும் அமைதியாக இருக்கிறார் கூட்டணிக்காவா? சீட்டுக்காகவா? தேர்தலுக்காகவா? தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை இது குறித்து ஒரு மூச்சு கூட விடவில்லை. திமுக தமிழகத்துக்கு செய்த முதலீடு பொய்தான். கூட்டணி கட்சிகள் ஏன் மவுனம் காக்கிறார்கள்.

தென் மாவட்டங்களில் கனிமவளங்கள் அதிகளில் கேரளாவுக்கு கடத்திச் செல்லப்படுகிறது. இதில் மிகப்பெரிய ஊழல் நடக்கிறது. இது குறித்து அறிக்கைகள் வெளியிட்டோம் ஆனால் அரசு இதை கண்டுகொள்ளவில்லை. தென் மாவட்டத்தில் உள்ள முக்கிய திமுக புள்ளி ஒருவர் தான் இந்த விவகாரங்களுக்கு எல்லாம் 'காட் ஃபாதர்'. தமிழகத்தில் இருந்து ஆயிரக்கணக்கான கனிமவளங்களை கேரளாவுக்கு கடத்தி செல்கிறார்கள். இது அனைவருக்கும் தெரியும். இந்த விவகாரத்தை விசாரிக்க சிபிஐ விசாரணை வேண்டும்.

வேளாண்துறை அமைச்சர் விவசாயிகள் குறித்து கவலைப் படவில்லை. விவசாயிகள் இதற்கு தக்க பாடம் புகட்டுவார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## பழனிசாமியிடம் வயலில் முளைவிட்ட கதிரைத்தான் காட்டினேன்

### தஞ்சாவூரைச் சேர்ந்த பெண் விவசாயி விளக்கம்

தஞ்சாவூர், அக்.26-

ஆய்வுக்கு வந்த எதிர்க் கட்சித் தலைவர் பழனி சாமியிடம், வயலில் சாய்ந்து முளைவிட்ட நெற் கதிர்களைத்தான் காண்பித் தேன் என்று தஞ்சாவூரைச் சேர்ந்த பெண் விவசாயி விளக்கம் அளித்துள்ளார்.

டெல்டா மாவட்டங்களில் மழையால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களையும், நெல் கொள்முதல் நிலையங் களில் கொள்முதல் செய் யப்படாமல் தேங்கி முளை விட்டுள்ள நெல்மணிகளை யும் பார்வையிடுவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி கடந்த 22ல் தஞ் சாவூருக்கு வந்தார்.

காட்டூர் நெல் கொள் முதல் நிலையத்தில் அவர் ஆய்வு செய்தபோது, வரவுக்கோட்டையைச் சேர்ந்த பூங்கொடி என்ற பெண் விவசாயி, தனது வயலில் அழுகிய நெற் கதிர்களையும், அதில் முளைத்த நெல்மணி களையும் பழனிசாமி யிடம் காண்பித்து, தனது வேதனையைத் தெரிவித் தார்.

இதனிடையே நேற்று முன்தினம் தஞ்சாவூர் ரயில் நிலையத்தில் நெல் மூட் டைகளை வேகன்களில் அனுப்பும் பணியைப் பார்வையிட வந்த துணை முதல்வர் உதயநிதி ஸ்டா லின், நெல் கொள்முதல் தொடர்பாக எதிர்க்கட் சித் தலைவர் பழனி சாமி பொய்யான தகவல் களை கூறியுள்ளதாகவும், அவரிடம் நெல்மணிகள் முளைத்துள்ளதை காட் டிய பெண் (பூங்கொடி) குத்தகை சாகுபடி செய்து வருபவர் என்றும், அவர் இன்னும் அறுவடை பணி யையே மேற்கொள்ளாத போது, அவர் எப்படி நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்தார் என்பது அவருக் குத்தான் வெளிச்சம் என் றும் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து வரவுக் கோட்டையைச் சேர்ந்த விவசாயி பூங்கொடி 'இந்து தமிழ் திசை' செய்தியாளரிடம் கூறிய தாவது: நான் 5 ஏக்கரில் குத்தகை சாகுபடி செய்து வருகிறேன். தற்போது அறு வடை செய்யும் தருவாயில் உள்ள குறுவை நெற்கதிர் கள், அண்மையில் பெய்த மழையில் நனைந்து வயலிலேயே சாய்ந்து முளைவிடத் தொடங்கி யுள்ளன.

இந்நிலையில், காட்டூர் கொள்முதல் நிலையத் துக்கு பழனிசாமி வருவ தாகக் கூறியதால், விவசா யிகள் அங்கு சென்றோம். அப்போது நான், எனது வயலில் மழையில் அழுகிய மற்றும் நெல்மணிகள் முளைவிட்ட நெற்பயிரை பழனிசாமியிடம் காண்பித் து, பாதிப்பு குறித்து தெரி வித்தேன். நெல் கொள் முதல் நிலையத்துக்கு கொண்டுவந்த நெல்மணி கள் முளைத்துவிட்டதாக நான் கூறவில்லை. பின் னர், வேளாண்மை, வரு வாய்த் துறை அதிகாரிகள் எனது வயலைப் பார்வை யிட்டனர்.

அப்போது வயலிலேயே முளைவிட்ட நெற்கதிர் களை படம் பிடித்தனர். நான் ரூ.1.5 லட்சம் செலவு செய்து சாகுபடி செய் தேன். தற்போது அறுவடை செய்யமுடியாத நிலை ஏற் பட்டுள்ளது. அறுவடையை முடித்து, அதில் கிடைக் கும் வருவாயைக் கொண் டு, மழையில் ஒழுகும் கூரை வீட்டை சரி செய்ய வேண்டும் என்று கருதி யிருந்தேன். ஆனால், மழையில் நனைந்து நெல் மணிகள் முளைத்துள்ள தால், வேதனையாக உள் ளது. இவ்வாறு அவர் கூறி னார்.

## ஊடுருவல்காரர்களை வெளியேற்றும் பணியை எங்கள் அரசு செய்யும்: பிஹாரில் அமித் ஷா பிரச்சாரம்

பாட்னா: அக்.26-

"பிஹாரில் ஊடுருவல்காரர்கள் தொடர்ந்து வாழ வேண்டும் என ராகுல் காந்தி பேரணிகளை நடத்துகிறார். பிஹாரில் மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி அமைந்ததும், ஒவ்வொரு ஊடுருவல்காரர்களையும் வெளியேற்றும் வேலையை எங்கள் அரசு செய்யும்" என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.



பிஹார் உள்ளிட்ட வட மாநிலங்களில் இன்று சாத் திருவிழா தொடங்கியுள்ளது. தேர்தல் நெருங்குவதால் பிரச்சாரமும் சூடுபிடித்துள்ளது. சாத் திருவிழாவுக்கு மத்தியில் பிஹாரின் ககாரியா நகரில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய மத்திய உள்துறை அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான அமித் ஷா, "சாத் என்ற மாபெரும் திருவிழா இன்று தொடங்கி இருக்கிறது. நமது தாய்மார்களும் சகோதரிகளும் சாத் பூஜையை தொடங்கி இருக்கின்றனர்.

பிஹார், காட்டாட்சியில் இருந்து விலகி இருக்கவும், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு வலுவாக இருக்கவும், நமது சகோதரிகள் மற்றும் மகள்கள் பாதுகாப்பாக இருக்கவும், எதிர்காலத்தில் பிஹார் வளர்ந்த மாநிலமாக மாறவும் சாத் தேவியை நான் பிரார்த்திக்கிறேன்.

இந்த தேர்தல், எம்எல்ஏ அல்லது அமைச்சர் அல்லது முதல்வரை தேர்ந்தெடுப்பது பற்றியது அல்ல. இந்த தேர்தல் காட்டாட்சியை மீண்டும் கொண்டு வர வேண்டுமா அல்லது வளர்ச்சிக்கான ஆட்சியை கொண்டு வர வேண்டுமா என்பது பற்றியது. லாலு பிரசாத் ராப்ரி தேவி தலைமையிலான ஆட்சியில், காட்டாட்சி மட்டுமே நடக்கும். அதேநேரத்தில், தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியில் இருந்தால், பிஹார் வளர்ச்சி பெற்று அதன் புகழ் நாடு முழுவதும் பரவும்.

லாலுவின் ஆட்சியில் கொலை, கொள்ளை, பணம் பறித்தல், கடத்தல் ஆகியவை அன்றாட நிகழ்வுகளாக இருந்தன. அவர்களின் ஆட்சியில், தொழிற்சாலைகள் பிஹாரில் இருந்து வெளியேறின. இதனால், பிஹார் பின்தங்கியது.

அதேநேரத்தில், நிதிஷ் குமார் தலைமையின் கீழ் தேசிய ஜனநாயகக் கூட்டணி பிஹாரை காட்டாட்சியில் இருந்து விடுவித்தது. குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் சலுகைகளை அளிக்கும் நடைமுறைக்கு முடிவு கட்டப்பட்டது. மிக முக்கியமாக, பிஹாரை நக்ஸலிசத்தில் இருந்து விடுவித்தது.

பிஹாரின் மகன்களையும் மகள்களையும் முன்னேற்ற நிதிஷ் குமார் விரும்புகிறார். அதேநேரத்தில், லாலு பிரசாத் யாதவ் தனது மகனை முதல்வராக்கவும் சோனியா காந்தி தனது மகனை பிரதமராக்கவும் விரும்புகின்றனர். நரேந்திர மோடி, நிதிஷ் குமார் ஆகிய இருவரால் மட்டுமே பிஹாரின் மகன்கள் மற்றும் மகள்களின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த முடியும்.

இன்று வரை பிரதமர் மோடி மீதோ முதல்வர் நிதிஷ் குமார் மீதோ ஒரு பைசா கூட ஊழல் குற்றச்சாட்டு இல்லை. ஆனால், லாலு பிரசாத் யாதவ் மீது கால்நடை தீவன ஊழல், வெள்ள நிவாரண ஊழல், ஙிறிஷிசி ஊழல் உட்பட பல்வேறு ஊழல் வழக்குகள் உள்ளன.

என்டிஏ அரசு சமீபத்தில், 'ஜீவிகா தீதி' திட்டத்தின் கீழ் ஒரு கோடி பெண்களின் வங்கிக் கணக்குகளில் தலா ரூ.10,000 டெபாசிட் செய்தது. விதவை ஓய்வூதியமும் மூத்த குடிமக்களுக்கான ஓய்வூதியமும் ரூ.400ல் இருந்து ரூ.1,100 ஆக உயர்த்தப்பட்டுள்ளன. ஆஷா ஊழியர்களுக்கான கவுரவ ஊதியம் ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதுபோல ஏராளமான வளர்ச்சிப் பணிகளை நிதிஷ் குமார் அரசு செய்துள்ளது. தற்போது பாட்னாவில் மெட்ரோ ரயில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பிரதமர் மோடி நமது நாட்டின் பொருளாதாரத்தை 11வது இடத்தில் இருந்து 4வது இடத்துக்கு கொண்டு வந்துள்ளார். 2027க்குள் நாம் 3வது பொருளாதாரமாக முன்னேறுவோம். நாட்டின் பாதுகாப்பை பிரதமர் மோடி பலப்படுத்தி உள்ளார். பயங்கரவாதிகளை அவர்களின் இடத்துக்கே சென்று நமது ராணுவம் தாக்குகிறது.

ஊடுருவல்காரர்கள் பிஹாரில் தொடர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக ராகுல் காந்தி பேரணிகளை நடத்துகிறார். நான் அவருக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன், நீங்கள் எவ்வளவுதான் முயன்றாலும் ஊடுருவல்காரர்களை உங்களால் காப்பாற்ற முடியாது. பிஹார் மக்கள் மீண்டும் தேசிய ஜனநாயகக் கூட்டணியை ஆட்சியில் அமர்த்துவார்கள். நாட்டில் இருந்து ஒவ்வொரு ஊடுருவல்காரர்களையும் வெளியேற்றும் வேலையை எங்கள் அரசு செய்யும்." என தெரிவித்தார்.





## மழை வெள்ளத்தில் கடும் சேதம்: பழைய குற்றாலம் அருவியில் குளிக்க தடை

தென்காசி, நெல்லை, அக்.26-

தென்காசி, திருநெல்வேலி மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. நேற்று காலை வரை 24 மணி நேரத்தில் குண்டாறு அணையில் 32 மி.மீ., அடவிநயினார் அணையில் 29 மி.மீ., செங்கோட்டையில் 24 மி.மீ., கடனாநதி அணையில் 16 மி.மீ., கருப்பாநதி அணையில் 19.50 மி.மீ., ஆய்க்குடியில் 12 மி.மீ., சிவகிரியில் 7 மி.மீ., ராமநதி அணை, தென்காசியில் தலா 3 மி.மீ. சங்கரன்கோவிலில் 2 மி.மீ. மழை பதிவானது.

கடனாநதி அணை நீர்மட்டம் 58 அடியாகவும், ராமநதி அணை நீர்மட்டம் 67 அடியாகவும், கருப்பாநதி அணை நீர்மட்டம் 57.75 அடியாகவும், அடவிநயினார் அணை நீர்மட்டம் 123.25 அடியாகவும் இருந்தது. குண்டாறு அணை தொடர்ந்து முழு கொள்ளளவில் உள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் பழைய குற்றாலம் அருவிக்கரை, பிரதான அருவிக்கரை பகுதிகளில் தடுப்புக் கம்பிகள் சேதமடைந்தன. இதனால் இந்த அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை நீடிக்கிறது.

குற்றாலம் பிரதான அருவிக்கரை பகுதியில் ஏற்பட்ட சேதங்களை சரி செய்யும் பணிகள் நடைபெற்று வருவதாகவும், ஒரு சில நாட்களில் பணிகள் முடிந்துவிடும் என்றும் பேரூராட்சி தலைவர் கணேசன் தாமோதரன் கூறினார். பராமரிப்பு பணிகள் முடிந்த பின்னர் பிரதான அருவியில் குளிக்க அனுமதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இதேபோல் பழைய குற்றாலம் அருவி மூடப்பட்டுள்ளது. இப்பகுதியில் ஆய்வு செய்த மாவட்ட வன அலுவலர் ராஜ்மோகன், "பழைய குற்றாலம் அருவிப் பகுதி வெள்ளத்தால் பெரும் சேதம் அடைந்துள்ளது. அருவியின் கீழ் பகுதியில் அமைந்துள்ள தடுப்பு வேலிகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளன. தடுப்புக்கு கீழ் உள்ள சுவரும் சேதமடைந்து காணப்படுகிறது. உடை மாற்றும் அறையின் கதவுகளும், கழிப்பறையின் கதவுகள் மற்றும் கோப்பைகளும் வெள்ளத்தால் சேதம் அடைந்துள்ளன.

கழிப்பறைக்கு செல்லும் பைப் லைன் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது. அருவிக்கு செல்லும் சாலையின் இருபுறமும் காட்டாற்று வெள்ளத்தால் அரிப்பு ஏற்பட்டு மிகப்பெரிய பள்ளம் காணப்படுகிறது. மழைநீர் வடிந்த பின்பு தான் முழுமையான சேதம் மதிப்பு தெரியவரும். தற்போது தண்ணீர் அதிகமாக விழுவதால் சேத மதிப்பை கணக்கிட முடியவில்லை.

எனவே, பொதுமக்களின் நலன் கருதி அருவியில் குளிக்க தடை நீடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதியில் வனவிலங்கு நடமாட்டம் இருப்பதால் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்தவுடன் தக்க பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு மீண்டும் தக்க பாதுகாப்புடன் அருவியில் சுற்றுலாப் பயணிகள் குளிப்பதற்காக அனுமதிக்கப்படும்" என்று தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி: திருநெல்வேலி மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பலத்த மழை பெய்துள்ளது. நேற்று காலை 8 மணிவரையிலான 24 மணிநேரத்தில் அதிகபட்சமாக இங்குள்ள நாலுமுக்கு பகுதியில் 118 மி.மீ. மழை பதிவாகியிருந்தது. இதுபோல் ஊத்து பகுதியில் 105, காக்காச்சியில் 80, மாஞ்சோலையில் 52 மி.மீ. மழை பெய்திருந்தது.

மாவட்டத்தில் அணைப்பகுதிகளிலும், பிறஇடங்களிலும் பதிவான மழையளவு (மி.மீட்டரில்) அம்பாசமுத்திரம் 8.40, சேரன்மகாதேவி 3, மணிமுத்தாறு 9.20, நாங்குநேரி 20, பாளையங்கோட்டை 3, பாபநாசம் 31, ராதாபுரம் 29, திருநெல்வேலி 1.80, சேர்வலாறு அணை 11, கன்னடியன் அணைக்கட்டு 10.60, களக்காடு 16.40, கொடுமுடியாறு அணை 43, மூலைக்கரைப்பட்டி 5, நம்பியாறு அணை 14.

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. 143 அடி உச்சநீர்மட்டம் கொண்ட பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 1,847 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து 250 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது.

அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்து 98 அடியாக இருந்தது. 118 அடி உச்சநீர்மட்டம் கொண்ட மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 1 அடி உயர்ந்து 97.26 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 854 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணை மூடப்பட்டிருந்தது.



# அழகன் நவீன அரிசி ஆலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா நேரில் பார்வையிட்டு ஆய்வு

கன்னியாகுமரி, அக்.26-

கன்னியாகுமரி காட்டுவிளை பகுதியில் அமைந்துள்ள அழகன் நவீன அரிசி ஆலையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (25.10.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டம் காட்டுவிளை பகுதியில் அமைந்துள்ள அழகன் நவீன அரிசி ஆலையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழக நேரடி கொள்முதல் நிலையங்களில் இருந்து பெறப்படும் நெல் மணிகளை அரிசியாக அரைத்து மீண்டும் நுகர்பொருள் வாணிக கழக அரிசி கிட்டங்கிகளுக்கு அனுப்பி வைப்பார்கள்.

அழகன் நவீன அரிசி ஆலையினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கெள்ளப்பட்டது. மேலும் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் இதர மாவட்டங்களில் இருந்து பெறப்படும் நெல் மூட்டைகள் சேமித்து வைக்கப்பட்டு நவீன அரிசி ஆலை இயந்திரங்கள் மூலம் எவ்வாறு அரிசியாக பதப்படுத்தப்படுகிறது என்பது குறித்தும், ஆலையில் உள்ள இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்தும், அனுப்பப்படும் முறைகள் குறித்தும் அரிசி ஆலையின் உரிமையாளர் மற்றும் அரிசி ஆலை நடத்துனர்களிடம் கேட்டறியப்பட்டது.

நெல் மூட்டைகள் அதிக அளவில் வருவதால் ஒவ்வொரு நாளும் அரிசி ஆலை செயல்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு நாளும் குறைந்தது 100 டன் அரிசி அரவை செய்யப்பட்ட வேண்டும் என்றும் அரிசியின் தரம் சிறப்பானதாக இருக்க வேண்டும் என்றும் ஆலையின் உரிமையாளருக்கு அறிவுறுத்தப்பட்டது.

மேலும் செண்பகராமன் புதூர் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் அதிக அளவு நெல் தேக்கி வைக்கப்பட்டு இருப்பதாகவும் இதனால் புதிய கொள்முதல் விவசாயிகளிடமிருந்து மேற்கொள்ள முடியவில்லை என்றும் அதனால் செண்பகராமன் புதூர் நெல் கொள்முதல் நிலையத்தில் இருந்து உடனடியாக கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகளை அரிசி ஆலைக்கு கொண்டு வர வேண்டும் என்றும் நேரடி கொள்முதல் நிலையத்திலிருந்து நெல் மூட்டைகளை கொண்டு வருவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள நிறுவனத்தை வலியுறுத்தி உடனடியாக நெல் மூட்டைகளை அரிசி ஆலைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆர்.அழகுமீனா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற ஆய்வில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு.ஜெங்கின் பிரபாகர், நுகர் பொருள் வாணிபக் கழக துணை மேலாளர் தரக்கட்டுப்பாடு கண்காணிப்பாளர், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



■ சிவகங்கை மாவட்டம், தி.புதூர் மஞ்சுவிரட்டு மைதானம் அருகில் சிவகங்கை லயன்ஸ் சங்கம், First Garment's அம்மையப்பர் குழுமம் மற்றும் இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை (பயிற்சி மையம்) ஆகியவைகளின் சார்பில் 10,000 பனை விதைகள் நடும் விழாவினை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தொடங்கி வைத்தார். உடன் இலுப்பைக்குடி இந்தோ திபெத்திய எல்லைக் காவல் படை டி.ஐ.ஜி திரு.ஜஸ்டின் ராபர்ட் அவர்கள், First Garment's அம்மையப்பர் குழும போக்குவரத்து மேலாளர் திரு.மதிக்குமார் அவர்கள், லயன்ஸ் சங்க மாவட்ட ஆளுநர் PMJF Lion CAD.செல்வம் அவர்கள், முதல்நிலை ஆளுநர் PMJF Lion N.ஆறுமுகம் அவர்கள், GLT ஒருங்கிணைப்பாளர் PMJF Lion Dr.M.ஸ்டாலின் ஆரோக்கியம் அவர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## அமைச்சர் பெருமக்கள், மருதுபாண்டியர்களின் 224வது நினைவு தினத்தை முன்னிட்டு,

# திருப்பத்தூரில் அமைந்துள்ள மருதுபாண்டியர்களின் நினைவு மண்டபத்தில் அன்னார்களின் திருவுருவச்சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்தும், திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகிலுள்ள அன்னார்களின் நினைவுத்தூணிற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினர்

சிவகங்கை, அக்.26-

சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூரில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைந்துள்ள மருதுபாண்டியர் நினைவு மண்டபத்தில் மருதுபாண்டியர்களின் 224 வது நினைவு தின அரசு விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி அவர்கள், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள், மாண்புமிகு வனம் மற்றும் கதர் துறை அமைச்சர் திரு. ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் அவர்கள், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாக ராஜன் அவர்கள், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் டாக்டர். டி.ஆர்.பி. ராஜா அவர்கள் ஆகியோர் அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



அதனைத்தொடர்ந்து, திருப்பத்தூர் பேருந்து நிலையம் அருகில் உள்ள மருதுபாண்டியர்களின் நினைவுத்தூணிற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

முன்னதாக, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் மருதுபாண்டியர்களின் நினைவு மண்டப வளாகத்தில் தேசியக் கொடி ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி, மருதுபாண்டியர்களின் திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் அவர்கள், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ்.மாங்குடி அவர்கள், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.சிவ பிரசாத்,இ.கா.ப., அவர்கள், தேவகோட்டை சார் ஆட்சியர் திரு.ஆயுஷ் வெங்கட் வட்ஸ், இ.ஆ.ப., அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மு.ராஜசெல்வன் அவர்கள், திருப்பத்தூர் பேரூராட்சி தலைவர் திருமதி கோகிலாராணி அவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




# தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 31.10.2025 அன்று நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, அக்.26-

தென்காசி மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 31.10.2025 வெள்ளிக்கிழமை காலை 11:00 மணிக்கு தென்காசி மாவட்ட ஆட்சியர் திரு. ஏ.கே. கமல் கிஷோர், இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தென்காசி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து துறை அலுவலர்களும் பங்கேற்கிறார்கள்.

எனவே, அனைத்து வட்டார விவசாயிகளும் கலந்து கொள்வதோடு மனுவில் தங்களது கைபேசி எண்ணையும் குறிப்பிடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விவசாய குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து பெறப்படும் மனுவிற்கான ஒப்புகையும் மனுவின் கோரிக்கை தொடர்பான விபரங்களும் அனைத்து வகை கைபேசிகளிலும் பார்க்கும் வண்ணம் செயலி வாயிலாக குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். இக்குறைதீர் நாள் கூட்டத்தில் விவசாயம் தொடர்பான தங்களது கோரிக்கை மனுக்களை அளித்து பயனடையுமாறு தென்காசி மாவட்ட விவசாயிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# "திருக்குறள் முற்றோதல் போட்டியில் பங்கேற்க பள்ளி மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, அக்.26-

தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், உலகப் பொதுமறையாம் திருக்குறளில் உள்ள கருத்துக்களை மாணவ, மாணவியர்கள் அறிந்து கொண்டு கல்வி அறிவுடன் ஒழுக்கம் மிக்கவர்களாக விளங்கச் செய்யும் வகையில் 1330 குறட்பாக்களையும் மனப்பாடம் செய்து ஒப்புவிக்கும் திறன் பெற்ற மாணவ, மாணவியருக்கு ரூ.15,000 பரிசும், பாராட்டுச் சான்றிதழும் ஆண்டுதோறும் வழங்கப்பெற்று வருகிறது.

"திருக்குறள் முற்றோதல் பாராட்டுப் பரிசு" என்ற பெயரில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத்திட்டத்தின் கீழ் 2026-2027 ஆம் ஆண்டிற்கு தேனி மாவட்ட அளவில் பங்கேற்க மாணவ, மாணவியர்கள் விண்ணப்பிக்கலாம்.

முற்றோதலில் பங்கேற்கும் மாணவ, மாணவியர்கள் 1330 குறட்பாக்களையும் ஒப்புவிக்கும் திறன் பெற்றவர்களாக இருத்தல் வேண்டும். திருக்குறளில் இயல் எண், அதிகாரம், குறள் எண், குறளின் பொருள், திருக்குறளின் அடைமொழி, சிறப்புகள், திருக்குறள் சிறப்புப் பெயர்கள், உரை எழுதியோர் போன்றவற்றை அறிந்திருந்தால் கூடுதல் தகுதியாக எடுத்துக்கொள்ளப்படும்.



இப்போட்டியில் பங்கேற்கும் மாணவ, மாணவியர்கள் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள திறனறி குழுவின் முன்னிலையில் நேராய்வுக்கு உட்படுத்தப்பட்டு அக்குழு வின் பரிந்துரையின் அடிப்படையில், பரிசுக்குரியோர் பட்டியல் சென்னை, தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு பரிந்துரைக்கப்படும். ஏற்கனவே இம்முற்றோதலில் பங்கேற்று பரிசு பெற்றவர்கள் மீண்டும் கலந்துகொள்ள இயலாது.

திருக்குறள் முற்றோதல் போட்டிக்கான விண்ணப்பங்களை தேனி மாவட்ட தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் இணையதளத்திலோ (https://tamilvalarchithurai.tn.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

கூடுதல் விவரங்களுக்கு 04546 251030 / 91596 68240 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர், தமிழ்வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகம், அறை எண்: 53, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் தேனி மாவட்டம், என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது அஞ்சல் வழியாகவோ 30.11.2025 ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

# சிவகங்கை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இதுவரை நடைபெற்ற 11 "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமின் வாயிலாக, சுமார் 17,000 நபர்கள் சிகிச்சை பெற்று பயன்பெற்றுள்ளனர்

## புதுவயல் பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமில் மைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தகவல்

சிவகங்கை, அக்.26-

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள், புதுவயல் பேரூராட்சிக்குட்பட்ட ஸ்ரீ வித்யா கிரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி மற்றும் வித்யா கிரி கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் நடைபெற்ற "நலம் காக்கும் ஸ்டாலின்" திட்ட சிறப்பு மருத்துவ முகாமினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் திரு.எஸ். மாங்குடி அவர்கள் முன்னிலையில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த நான்கரை ஆண்டுகளில் பொதுமக்களுக்கு பயனுள்ள வகையில், எண்ணற்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவது மட்டுமன்றி, அனைத்து அரசு துறைகளும் சீரான வளர்ச்சியை பெற்றிடும் வகையில் சிறப்பான நிர்வாகத்தினை தமிழகத்தில் ஏற்படுத்தியுள்ளார்கள். குறிப்பாக, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் பொதுமக்களின் உடல்நலத்தினை பேணிக் காத்திடும் பொருட்டு, பல்வேறு திட்டங்களும் தமிழகம் முழுவதும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு, தரமான மருத்துவ சேவையும் பொது மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய சிந்தனையில் உதித்த நலம் காக்கும் ஸ்டாலின் திட்டமானது கடந்த ஆகஸ்ட் மாதம் தமிழகம் முழுவதும் தொடங்கி வைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, சிவகங்கை மாவட்டத்தில் 39 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு, பிரதிவாரம் சனிக்கிழமைதோறும் மாவட்டத்தின் குறிப்பிட்ட பகுதியில் இம்முகாமானது சிறப்பாக நடைபெற்று வருகிறது.

அதன்படி, 11 முகாம்கள் சிறப்பாக நிறைவுபெற்று, தற்போது 12 வது முகாமானது புதுவயல் பகுதியில் இன்றையதினம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. அவ்வாறாக, மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நடைபெற்ற 11 நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்களின் வாயிலாக 2,500 மாற்றுத்திறனாளிகள் உட்பட சுமார் 17,000 நபர்கள் இம்முகாம்களின் வாயிலாக பயன்பெற்றுள்ளனர். குறிப்பாக, தமிழகம் முழுவதும் நடைபெற்று வரும் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்களில் சிறந்த 10 மாவட்டங்களில் ஒன்றாக சிவகங்கை மாவட்டம் விளங்கி வருவது பெருமைக்குரிய ஒன்றாகும்.



பொதுமக்கள் தங்களின் உடல்நலம் குறித்து, வருமுன் காப்போம் என்ற அடிப்படையில், அவ்வப்போது மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்டு தங்களின் உடல்நலத்தினை சரிவர கண்காணித்து பாதுகாப்பது அவசியமாகும். இதனை கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசின் வாயிலாக இத்திட்டமானது சிறப்பாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இச்சிறப்பு மருத்துவ முகாம்களின் மூலம் ரூபாய் 3,000 மதிப்பீட்டிலான பல்வேறு மருத்துவ பரிசோதனைகளை பொதுமக்கள் பெறுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற அடிப்படையில், பொதுமக்கள் பயன்பெறும் வகையிலும், தங்களது உடல்நலத்தை முறையாக பேணி காப்பதற்கும் அடிப்படையாக இதுபோன்ற திட்டங்களை பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு முன்பாகவே செயல்படுத்தி, மக்களின் நலன் காக்கின்ற அரசாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு திகழ்ந்து வருகிறது என மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் தெரிவித்தார்.

இம்முகாமில், 10 கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்ளையும், 1 மாற்றுத்திறனாளிக்கு ரூபாய் 15,750/ மதிப்பீட்டிலான மடக்கு சக்கர நாற்காலியினையும், 5 மாற்றுத்திறனாளிகளுக்கு தேசிய மாற்றுத்திறனாளிகள் அடையாள அட்டைகளையும், 2 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூபாய் 6,570/ மதிப்பீட்டிலான காதொலி கருவிகளையும் மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை அரசு மருத்துவமனை மருத்துவ கல்லூரி முதல்வர் மரு.சீனிவாசன் அவர்கள், இணை இயக்குநர் (மருத்துவப்பணிகள்) (பொ) மரு.அருள்தாஸ் அவர்கள், மாவட்ட சுகாதார அலுவலர் மரு.எஸ்.மீனாட்சி, புதுவயல் பேரூராட்சி தலைவர் திரு.முகமது மீரா, புதுவயல் பேரூராட்சி துணை தலைவர் திரு.பகுருதீன், ஸ்ரீ வித்யா கிரி மெட்ரிக்குலேசன் மேல்நிலைப்பள்ளி தாளாளர் திரு.சாமிநாதன், காரைக்குடி வட்டாட்சியர் திரு.ராஜா, புதுவயல் பேரூராட்சி செயல் அலுவலர் திரு.உமா மகேஸ்வரன், வட்டார மருத்துவ அலுவலர் (அரசு ஆரம்ப சுகாதார நிலையம், புதுவயல்) மரு. ச.ஆனந்தராஜ் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கோயம்புத்தூர் மாவட்டம்: தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், வாழ்ந்துக் காட்டுவோம் திட்டத்தின் மூலமாக இணை மானிய திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகள் தமிழ்நாடு முதலமைச்சருக்கு நிறைந்த மனதுடன் நன்றியினை தெரிவித்தனர்

நகர்ப்புறங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த மகளிர்களை கொண்டு சுய உதவிக்குழுக்களை அமைத்து அவர்களுக்கு தேவையான வேலை வாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி, தனிநபர் கடன், குழுக்கடன் மற்றும் வங்கிக்கடன், குழுக்களை இணைத்தல் மூலமாக அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

மகளிர்களுக்கான கிராம வறுமை ஒழிப்புசங்கம் அமைத்தல், ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பு ஏற்படுத்துதல் புதிய மகளிர் சுயஉதவி க்குழுக்கள் அமைத்தல், ஊராட்சி அளவிலான குழுகூட்டமைப்பு ஏற்படுத்துதல், மாற்றுத்திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர்களுக்கான தனிநபர் கடன் வழங்குதல், மகளிர் சுயஉதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துதல், சுயவேலைவாய்ப்புத் திட்டம், திறன் வளர்ப்பு மற்றும் வேலை வாய்ப்பு பயிற்சி அளித்தல் போன்ற பல திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டத்தின் மூலமாக காரமடை வட்டாரம் நெல்லித்துறை ஊராட்சியில் 16 குக்கிராமங்களில் 20 பழங்குடியினர் மகளிர் குழுக்கள் சிறப்பாக செயல்ப்பட்டு வருகிறது. 20 குழுவில் 8 புதிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

TNSRLM, மகளிர் திட்டத்தின் மூலமாக ஒரு குழுவுக்கு ஆதார நிதி ரூ.15000/ வீதம் 8 குழுக்களுக்கு ரூ.1,20,000/ வரை வழங்கப்பட்டுள்ளது. மேலும் 20 குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் தனி நபராக தொழில் செய்து வருகின்றனர். அவர்களின் தொழில் மற்றும் வாழ்வாதாரம் மேன்படுத்துவதற்க்காக நெல்லித்துறை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலமாக சமுதாய முதலீட்டு நிதியாக ரூ.50,000/ முதல் ரூ.1,50,000/ வரை தொழிலுக்காக வழங்கி வருகின்றனர்.

மேலும், குழுக்களுக்கு இந்தியன் வங்கி தாயனூர் கிளையிலும் கனரா வங்கி மேட்டுப்பாளையம் கிளையிலும் 20 குழுக்களுக்கு ரூ. 1.14 கோடி வங்கி கடன் பெற்று தரப்பட்டுள்ளது. வங்கி கடன் பெற்ற குழுக்களுக்கு வட்டி மானியமும் மகளிர் திட்டத்தின் மூலமாக வழங்கி வருகின்றனர். மேலும் வாழ்ந்துக்காட்டுவோம் திட்டத்தின் மூலமாக இணைமானிய திட்டத்தின் மூலம் கடன் வழங்கி அரவை இயந்திரம் குழுக்களுக்கு




வழங்கப்பட்டுள்ளது. மலைப்பகுதிகளில் கிடைக்க கூடிய இயற்கை பொருட்களை எடுத்து சிறிய அளவில் தொழில் செய்து வருகின்றனர் .

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளில் மகளிர் திட்டம் சார்பில் காரமடை, பெரியநாயக்கன்பாளையம், அன்னூர், சர்க்கரசமாக்குளம் ஆகிய 4 வட்டரங்களில் இணைய மானிய திட்டத்தின் கீழ் 225 குழுக்களுக்கு ரூ.9.30 கோடி கடன் உதவி வழங்கப்பட்டுள்ளது. இதில் ரூ.3.07 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

தற்போது தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டத்தின் மூலமாக மதி சந்தைகள் மற்றும் கல்லூரி சந்தைகளில் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுவதற்க்காக மகளிர் திட்டத்தின் மூலம் 12 மகளிர் குழுக்களில் உள்ள உறுப்பினர்களை கொண்டு மரமில்லா வனப்பொருட்கள் தொகுப்பு துவங்கப்பட்டது. அத்தொகுப்பில் மலைப்பகுதிகளில் கிடைக்க கூடிய இயற்கை பொருட்களான கடுக்காய், ஜாதிக்காய், ஆவாரம் பூ, அரப்பு, சீயக்காய், நெல்லிக்காய், வேங்கை பொட்டு, போன்றவைகளை பெற்று அதனை மதிப்பு கூட்டும் பொருட்களாக செய்வதற்கு இத்தொகுப்பில் மூல பொருட்கள் பெறுவதற்கும் இயந்திரங்களுக்கு ரூ.10 இலட்சம் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மகளிர் திட்டத்தின் மூலமாக கடனாக 6 சதவீதம் வட்டி வழங்கப்பட்டு உள்ளது. மேலும் அதனை சிறப்பாக செயல்படுத்துவதற்கும் பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை வட்டாரம், நெல்லித்துறை ஊராட்சியில், கீழ்பில்லூர் குக்கிராமத்தை சேர்ந்த திருமதி.சுதா அவர்கள் நிறைந்த மனதுடன் தெரிவித்ததாவது:



எனது பெயர் திருமதி.சுதா. நான் காரமடை வட்டாரம், நெல்லித்துறை ஊராட்சியில்,



கீழ்பில்லூர் குக்கிராமத்தை சேர்ந்த நான் வெண்ணிலா மகளிர் சுய உதவுக்குழுவில் 5 வருடங்களாக உறுப்பினராக உள்ளேன். நான் மகளிர் திட்டத்தில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின் (Rseti) மூலமாக 10 நாட்கள் மசாலா பொடி தயாரிக்கும் பயிற்சி எடுத்துக்கொண்டேன்.

அதன் பின்பு சிறிய அளவில் அருகில் உள்ள குக்கிராமங்களுக்கு மட்டும் அரைத்து விற்பனை செய்து வந்தேன். மேலும் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலமாக இணைமானிய திட்டத்தில் ரூபாய் 2,85,000/ வங்கி மூலமாக பெற்று இயற்க்கை பொருட்களை மதிப்புக்கூட்டு பொருட்களாக செய்து விற்பனை செய்து வருகிறேன். மேலும் தொழிலை மேம்படுத்த மரமில்லா வன பொருட்கள் தொகுப்பில் இணைத்து பொருட்கள் உற்பத்தி செய்து வருகிறோம் தற்போது எங்களின் வாழ்வாதாரம் மேம்பாட்டுள்ளது. இந்த திட்டத்தை தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது மகளிர் குழு சார்பாக நன்றியை நிறைந்த மனதுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

கோயம்புத்தூர் மாவட்டம், காரமடை வட்டாரம், நெல்லித்துறை ஊராட்சியில், கீழ்பில்லூர் குக்கிராமத்தை சேர்ந்த திருமதி.சிவகாமி அவர்கள் நிறைந்த மனதுடன் தெரிவித்ததாவது:

எனது பெயர் திருமதி. சிவகாமி, நான் காரமடை வட்டாரம், நெல்லித்துறை ஊராட்சியில், கீழ்பில்லூர் குக்கிராமத்தில் ஆகிய நான் வெண்ணிலா மகளிர் சுய உதவுக்குழுவில் 5 வருடங்களாக உறுப்பினராக உள்ளேன். மகளிர் திட்டத்தில் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி நிறுவனத்தின்






(Rseti) மூலமாக 10 நாட்கள் மசாலா பொடி தயாரிக்கும் பயிற்சி எடுத்துக்கொண்டேன். அதன் பின்பு சிறிய அளவில் அருகில் உள்ள குக்கிராமங்களுக்கு மட்டும் அரைத்து விற்பனை செய்து வந்தேன். பின்பு அருகில் உள்ள காலை உணவு திட்டம் செயல்படுத்தக்கூடிய பள்ளிகளுக்கும் சமைப்பதற்கான மாசலாப் பொருட்கள் செய்து கொடுத்து வந்தேன்.

மேலும் மகளிர் திட்டத்தின் மூலமாக மரமில்லா வன பொருட்கள் தொகுப்பில் இணைந்து மலைகளில் கிடைக்கக்கூடிய இயற்கை பொரு ட்களை மதிப்புக்கூட்டு பொருட்களாக செய்து விற்பனை செய்து வருகிறேன். மேலும் தொழிலை மேம்படுத்தவும் சந்தைப்படுத்துதலுக்கு உதவியாக இருக்கின்றது. தற்போது எங்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப் பட்டுள்ளது. மகளிர்கள் பயன்பெறும் வகையில், இதுபோன்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது மகளிர் குழு சார்பாக நன்றியை நிறைந்த மனதுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

**தொகுப்பு: ஆ.செந்தில் அண்ணா செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், இரா.சரண் உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) கோயம்புத்தூர் மாவட்டம்.**

## அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் -மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, அக்.26-

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பாகச், சீரிளமைத் திறம் கொண்ட அன்னைத் தமிழுக்கு அருந்தொண்டாற்றி வரும் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், திங்கள்தோறும் ரூ.7500/ மற்றும் மருத்துவப்படி ரூ.500/ என எட்டாயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்பெறுகிறது. தமிழுக்காகத் தம் வாழ்நாளை ஈந்துவரும் பெருமக்களுக்கு இந்த உதவித் தொகை அவர்கள் வாழுங்காலமெல்லாம் தமிழ்த் திருப்பணியில் தொய்வின்றி ஈடுபடும் வகையில் வழங்கப்படும்.

"தமிழுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் தொண்டாற்றும் அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்களுக்கு ஆண்டுதோறும் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை ஆண்டுக்கு 150ஆக உயர்த்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளது.

அவ்வாணையின்படி அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பெருமக்களிடமிருந்து 20252026 ஆம் ஆண்டிற்கு உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப் படிவத்தினை மண்டில / மாவட்டத் தமிழ் வளர்ச்சித் உதவி இயக்குநர், அலுவலகத்திலேயே நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம் அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்தில் (www.tamilvalarchithurai.tn.gov.in) பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை நேரிலும் மற்றும் tamilvalarchithurai.org/agavai/ என்ற வலைதளம் வாயிலாகவும் விண்ணப்பம் செய்வது கட்டாயமாகும்.

விண்ணப்பிக்கத் தகுதிகள்: 1) 01.01.2025 ஆம் நாளன்று 58 வயது நிறைவடைந்திருக்க வேண்டும். 2) ஆண்டு வருவாய் ரூ.1,20,000/க்குள் இருக்க வேண்டும். (வட்டாட்சியர் அலுவலகத்தில் இணைய வழியில் பெறப்பட்ட வருமானச் சான்று இணைக்கப் படவேண்டும்), 3) தமிழ்ப்பணி ஆற்றியமைக்கான விவரக் குறிப்பு 4) தமிழ்ப்பணி ஆற்றி வருவதற்கான பரிந்துரைச் சான்று இரண்டு தமிழறிஞர்களிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். 5) ஆதார் அட்டை நகல், குடும்ப அட்டை நகல் (ஸ்மார்ட் கார்டு), மரபுரிமையர் (கணவன் / மனைவி) இருப்பின் அவரது ஆதார் அட்டை நகல் இணைக்க வேண்டும்.

மகளிர் உரிமைத் தொகை, சமூகநல பாதுகாப்பு உதவித்தொகை போன்ற தமிழ்நாடு அரசின் வேறு திட்டங்களின் வாயிலாக உதவித்தொகை அல்லது ஓய்வூதியம் பெற்று வரும் பயனாளிகள் இத்திட்டத்திற்கு விண்ணப்பிக்க இயலாது'.

மேலும், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இயங்கிவரும் மாவட்டத் தமிழ் வளர்ச்சி உதவி இயக்குநர் அலுவலகத்தில் 17.11.2025க்குள் அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் 29.10.2025 அன்று மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவுள்ளது மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

தேனி, அக்.26-

தமிழ்நாடு அரசின் சார்பில், மாற்றுத்திறனாளிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்த பல்வேறு சிறப்பு திட்டங்களும், நலத்திட்ட உதவிகளும், மாதந்திர உதவித்தொகைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

தேனி மாவட்டத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் கூட்டம் 29.10.2025 அன்று தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் காலை 10.00 மணி முதல் 01.00 வரை நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் மற்றும் சங்க நிர்வாகிகள் தங்கள் கோரிக்கை தொடர்பாக மனு அளித்து பயன் பெறலாம். மனு அளிக்க விரும்பும் மாற்றுத்திறனாளிகள் தங்களது மாற்றுத்திறனாளி அடையாள அட்டை நகல், ஹிஞிமிஞி அட்டை நகல், குடும்ப அட்டை நகல், ஆதார் அட்டை நகல் மற்றும் புகைப்படம்1 ஆகிய ஆவணங்களுடன் நேரிலோ அல்லது பாதுகாவலர் மூலமாகவோ விண்ணப்பிக்கலாம்.

எனவே, மாற்றுத்திறனாளிகளுக்கான இச்சிறப்பு குறைதீர்க்கும் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ரஞ்ஜீத் சிங், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 65,500 கனஅடியில் இருந்து 45,500 கனஅடியாக சரிவு



சேலம், அக்.26-

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 65,500 கனஅடியில் இருந்து 45,500 கனஅடியாக சரிந்துள்ளது. டெல்டா பாசனத்துக்காக 22,300 கனஅடி நீரும், 16 கண் மதகு வழியாக 22,700 கனஅடி நீரும் வெளியேற்றப்படுகிறது. மேட்டூர் அணையில் இருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் வழியாக 500 கனஅடி நீரும் வெளியேற்றப்படுகிறது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 120 அடியாக உள்ள நிலையில் நீர் இருப்பு 93.47 டி.எம்.சி.யாக உள்ளது.

## தமிழகத்தில் இதுவரை பருவமழைக்கு 31 பேர் பலி; 47 பேர் காயம்: அமைச்சர் ராமச்சந்திரன் தகவல்

**சென்னை, அக்.26–**

நடப்பாண்டில் பருவமழை அதிகமாக பெய்யும் என எச்சரித்துள்ளதால் அதற்கேற்ப ஏற்பாடுகளை செய்துள்ளோம். அக்.25 வரை பெய்த பருவமழையால் 31 பேர் உயிரிழந்துள்ளனர். 47 பேர் காயமடைந்துள்ளனர். 485 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. என வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசும்போது, வங்கக்கடலில் உருவாகியுள்ள மோந்தா புயல் (montha cyclone) சென்னையை நோக்கி வருவதாக முதலில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது அது ஆந்திராவை நோக்கி நகர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அதன் ஒரு பகுதியாக, சென்னையைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் பெரிய அளவில் மழை பெய்ய வாய்ப்புள்ளது. அந்த மாவட்டங்களில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க ஆட்சியர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

இம்முறை வடகிழக்கு பருவமழை அதிகமாக பெய்யும் என எச்சரித்துள்ளதால் அதற்கேற்ப ஏற்பாடுகளை செய்துள்ளோம். அதோடு, முதல்வர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தியுள்ளார். கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் விரைந்து கரைக்குத் திரும்புமாறு அறிவுறுத்தியுள்ளோம்.

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை அக்.16ம் தேதி தொடங்கியது. அக்.25 வரை பெய்த மழையால் 31 பேர் உயிரிழந்துள்ளனர். 47 பேர் காயமடைந்துள்ளனர். 485 கால்நடைகள் உயிரிழந்துள்ளன. மாவட்டங்கள் தோறும் நிவாரண முகாம்களை தயாராக வைக்க ஆட்சியர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நெல் பாதிப்புகள் குறித்து கணக்கெடுப்புப் பணி தொடங்கியுள்ளது. இப்பணிகள் முடிந்தவுடன் நிவாரணம் வழங்கப்படும். கரையோரம் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல அறிவுறுத்தியுள்ளோம்.

நீர்வளத்துறை, வருவாய்த்துறை இணைந்து ஏரிகளின் நீர்மட்டத்தை கண்காணிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மழையால் பாதிப்பு ஏற்படாத வகையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் தொடர்பாக செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒன்றிய குழு ஆய்வு

செங்கல்பட்டு, அக்.26-

நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் தொடர்பாக செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒன்றிய குழு ஆய்வு மேற் கொண்டது. டெல்லா மாவட்டங்களில் தொடர்ச்சியாக மழை பெய்து வருவதால் நெல்லின் ஈரப்பதத்தை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்துவதற்காக தமிழ்நாடு அரசு சார்பில் ஒன்றிய அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது. கோரிக்கையை தொடர்ந்து நெல்லின் ஈரப்பதத்தை ஆய்வு செய்வதற்காக ஒன்றிய அரசு சார்பில் 3 குழுக்கள் இன்று தமிழ்நாட்டிற்கு வருகை தந்தது. அந்நிபுணர் குழு இன்று (25.10.2025) முதல் தமிழ்நாட்டில் கொள்முதல் செய்யப்படவுள்ள நெல்லின் ஈரப்பதம் குறித்து மாவட்டந்தோறும் ஆய்வு செய்ய திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி முதல் குழு 25.10.2025 அன்று செங்கல்பட்டு மாவட்டத்திலும், 26.10.2025 அன்று திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலும், இரண்டாவது குழு 25.10.2025 அன்று தஞ்சாவூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களிலும், 26.10.2025 அன்று திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களிலும், 27.10.2025 அன்று கடலூர் மாவட்டத்திலும் மற்றும் மூன்றாவது குழு 25.10.2025 அன்று திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலும் 26.10.2025 அன்று மதுரை மற்றும் தேனி மாவட்டங்களிலும் ஆய்வு செய்ய உள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நெல் கொள்முதலுக்கான ஈரப்பதம் தொடர்பாக முதல் குழு செங்கல்பட்டு மாவட்டத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டது. கீரப்பாக்கம் அரசு நேரடி கொள்முதல் நிலையத்தில் ஒன்றியக் குழுவினர் ஆய்வு மேற்கொண்டனர். ஒரகடம், படாளம் பகுதிகளில் நெல் கொள்முதல் நிலையங்களில் ஒன்றிய குழுவினர் ஆய்வு செய்தனர். நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 17%லிருந்து 22%ஆக உயர்த்துவது தொடர்பாக ஒன்றிய குழு ஆய்வு செய்து வருகிறது.

## சிபிஐ எஃப்ஐஆரில் நிர்வாகிகள் பெயர்: நகல் கேட்டு நீதிமன்றத்தில் தவெக வழக்கறிஞர்கள் மனு

கரூர், அக்.26-

சிபிஐ எஃப்ஐஆரில் தவெக நிர்வாகிகள் பெயர் இடம் பெற்றுள்ள நிலையில் நீதிமன்றத்தில் நகல் கேட்டு தவெக வழக்கறிஞர்கள் மனு செய்துள்ளனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27ம் தேதி நடந்த தவெக பிரச்சாரக் கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதுகுறித்து கரூர் நகர போலீஸார் தவெக நிர்வாகிகள் 3 பேர் மீது வழக்கு பதிவு செய்து கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பவுன்ராஜ் ஆகிய இருவரை கைது செய்தனர். இந்த விவகாரத்தில் உயர் நீதிமன்ற உத்தரவின்படி, சிறப்பு புலனாய்வுக்குழு அக்.3ம் தேதி அமைக்கப்பட்டது. அக்.5ம் தேதி கரூர் வந்த எஸ்டிஐ விசாரணையை தொடங்கியது. அரசு அதிகாரிகள், தவெக நிர்வாகிகள், உள்ளூர் தொலைக்காட்சி உரிமையாளர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது. மேலும், மதியழகனை 2 நாள் காவலில் எடுத்து விசாரணை நடத்தப்பட்டது.

அக்.13ம் தேதி உச்ச நீதிமன்றம் இவ்வழக்கை சிபிஐக்கு மாற்றி உத்தரவிட்டது. இதையடுத்து அக்.16ம் தேதி கரூர் வந்த சிபிஐயினரிடம் அக்.17ம் தேதி எஸ்ஐடி விசாரணை ஆவணங்களை ஒப்படைத்தது. சிபிஐ சார்பில் அக்.22ம் தேதி கரூர் ஜேஎம் 1 நீதிமன்றத்தில் சீலிடப்பட்ட கடிதம் ஒன்றை சிபிஐ இன்ஸ்பெக்டர் ஒப்படைக்கச் சென்றுள்ளார். அப்போது, கரூர் ஜேஎம் 1 மாஜிஸ்ட்ரேட் எஸ்.பி.பரத்குமார் விடுப்பு என்பதால், ஜேஎம் 2 நீதிமன்றத்தில் அந்தக் கடிதம் ஒப்படைக்கப்பட்டது.

அதில் சிபிஐயின் முதல் தகவல் அறிக்கை (எஃப்ஐஆர்) இருப்பதாக கூறப்பட்டது. அதில், சிபிஐ விசாரணை அதிகாரியான ஏஎஸ்பி முகேஷ்குமார் பதிவு செய்துள்ள எஃப்ஐஆரில், கரூர் மேற்கு மாவட்டச் செயலாளர் வி.பி.மதியழகன், பொதுச்செயலாளர் புஸ்ஸி என்.ஆனந்த், இணை செயலாளர் நிர்மல்குமார் மற்றும் தவெகவினர் பலர் என குறிப்பிட்டு அக்.18ம் தேதி எஃப்ஐஆர் பதிவு செய்யப்பட்டு விசாரணையை தொடர உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சூழலில், கரூர் ஜேஎம் 1 நீதிமன்றத்தில் சிபிஐ தாக்கல் செய்துள்ள எஃப்ஐஆரின் நகலை கேட்டு இன்று (அக்.25ம் தேதி) தவெக வழக்கறிஞர் அரசு மற்றும் அக்கட்சியின் வழக்கறிஞர்கள் மனு தாக்கல் செய்துள்ளனர்.



# “கலை மாமணி” விருதாளருக்குப் பாராட்டு விழா: குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் வாழ்த்துரை

காரைக்குடி, அக்.26-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர் இந்து மதாபிமான சங்கம், நகரத்தார் மகளிர் சங்கம் இணைந்து நடத்திய பாராட்டு விழா, வித்யாகிரி மே.நி.பள்ளியில் நடந்தது. சங்கத் தலைவர் வீர. இராமநாதன்(எ)மோகன் தலைமை வரித்தார். பொருளாளர் S.S.இராமசாமி முன்னிலையும், செயலாளர் இராய. சிதம் பரம் வரவேற்புரை யாற்றினார்கள். பாராட்டுப் பெற்றவர் களைப் பற்றி வாழ்க்கைக் குறிப்பை நகரத்தார் மகளிர் சங்கத் தலைவர் வள்ளிக்கண்ணு நாகராஜன் அறிமுகவுரையாற்றினார். சங்கவிழாவில், “பழம் பெரும் திரைப்பட இயக்குநர்”, “அச்சாணி, திக்கற்ற பார்வதி” திரைப்பட வசன ஆசிரியருமான, காரைக்குடி நாராயணன் “கலைமாமணி” விருதுக்கும், அருள்மிகு. கொப்புடையநாயகி அம்மன் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பேற்றுள்ள P.S.RM.A இராமசாமிக்கும் பாராட்டும் வாழ்த்துரையும், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளாரும், பிள்ளையார்பட்டி கற்பகவிநாயகர் திருக்கோவில் தலைமை அர்ச்சகர், “விகாஸ் ரத்னா” டாக்டர் .K.பிச்சைக் குருக்கள் ஆகியோர் பாராட்டிப் பேசினார்கள் காரைக்குடி நாராயணன், P.S.RM.A. இராமசா மிக்கும் மலர் மாலை, சால்வை அணிவித்து, நினைவுப்பரிசும் வழங்கியும் வாழ்த்தினார்கள். இவ்விழாவில், நகரத்தார் மகளிர் சங்க செயலாளர் சாந்தி சிங்காரம், பொருளாளர் தமிழரசி சம்பந்தம், உட்பட பலர் பங்கேற்றனர். விழா நிகழ்ச்சியை வள்ளியம்மை சரவணன் தொகுப்புரையாற்றினார்.




# வீட்டு உபயோகப் பொருட்களுக்கான சர்வீஸ் மற்றும் பழுதுபார்ப்பு சேவைகளுக்காக கோவையில் மித்ரா எனும் ஒரு பிரத்யோகசெயலி அறிமுகம்

கோவை, அக்.26-

கோவை ஆவராம்பாளையம் பகுதியில் உள்ள தனியார் அரங்கில் வீட்டு உபயோகப் பொருட்களுக்கான சர்வீஸ் மற்றும் பழுது பார்ப்பு சேவைகளுக்காக மித்ரா எனும் ஒரு பிரத்யோக செயலி அறிமுகம் விழா நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக பிரபல தொழிலதிபர்களான மன்னா மெஸ் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் ஜெயராஜ் மற்றும் சோஷியல் ஈகிள் நிறுவனர் தரணிதரன் ஆகியோர் கலந்து கொண்டு மித்ரா செயலியை அறிமுகம் செய்து வைத்தனர்.

மித்ரா செயலியின் பயன்பாடுகள் குறித்து நிறுவனத்தின் தலைவர் சந்தோஷ் கோபு கூறுகையில்,வீட்டு உபயோக பொருட்களை சரிசெய்வதில் அலைச்சல்களை தவிர்க்க இந்த செயலியை உருவாக்கி உள்ளதாகத தெரிவித்தார் மேலும் இந்த செயலியில் வீட்டு முகவரி மற்றும் தொலைபேசி எண்கள் மற்றும் தேவைப்படும் சேவைகள் குறித்து சிறிய தகவல்கள் பதிவு செய்தால் ஒரு மணி நேரத்தில் டெக்னிஷீயன்கள் நேரடியாக வீடுகளுக்கே வந்து பொருட்களை சர்வீஸ் செய்யவோ அல்லது பழுது பார்த்து தருவதாகவும் இந்த சேவையில் , டிவி, பிரிட்ஜ், வாசிங்மெசின், ஏ சி ஆகியவை சிறந்தமுறையில் சர்வீஸ் செய்து தரப்படுவதாகவும், அனைத்து பிராண்ட் பொருட்களும் சர்வீஸ் செய்யப்படுவதாக தெரிவித்தார். மேலும் தற்போது கோவையில் மட்டும் துவங்கி உள்ள இந்த சேவை விரைவில் அனைத்து இடங்களிலும் விரிவு படுத்த இருப்பதாக தெரிவித்தார். இந்நிகழ்வில் மித்ரா நிர்வாகிகள் அலுவலர்கள், வாடிக்கையாளர்கள் உட்பட ஏராளமான கலந்து கொண்டனர்.



# அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் அங்கன்வாடி மையத்தை பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்

மதுரை, அக்.26-

மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.61 அன்சாரி நகர் பகுதியில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மைய கட்டிடத்தை மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். மதுரை மாநகராட்சி மத்திய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மண்டலம் 3 வார்டு எண்.61 அன்சாரி நகர் பகுதியில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் ரூ.12 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி கட்டிடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்கள். தொடர்ந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்சாரி நகர், மகபூப்பாளையம் உள்ளிட்ட வார்டு எண்.61 க்கு உட்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டு சாலை, குடிநீர் மற்றும் தெருவிளக்கு உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும் மற்றும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவித் தொகை வேண்டி அப்பகுதி மக்களின் கோரிக்கைகளுக்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது உதவி ஆணையாளர் திரு.பிரபாகரன், உதவி செயற்பொறியாளர் திரு.முத்து, மக்கள் தொடர்பு அலுவலர் திரு.மகேஸ்வரன், மாமன்ற உறுப்பினர் திருமதி. செல்வி, மாவட்ட நிர்வாகம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம்: விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங் தலைமையில் நடைபெற்றது



தேனி, அக்.26-

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத் சிங், தலைமையில் நடைபெற்றது.

தேனி மாவட்டத்தின் இயல்பான ஆண்டு மழை அளவான 829.80 மி.மீக்கு அக்டோபர் மாதம் வரை 782.07 மி.மீ பெய்துள்ளது. இது இயல்பான மழையளவான 627.1 மி.மீயை காட்டிலும் 154.97 மி.மீ அதிகமாகும். அக்டோபர் மாத இயல்பு மழையளவான 179.7 மி.மீக்கு தற்பொழுது வரை 194.47 மி.மீ மழை பெய்துள்ளது. இது அக்டோபர் மாத இயல்பான மழை அளவை காட்டிலும் 14.77 மி.மீ அதிகமாகும்.

தேனி மாவட்டத்தில் நடப்பாண்டு நெல் 5,944 ஹெக்டரும், சிறுதானியம் 2542 ஹெக்டரும், பயறு வகைகள் 2076 ஹெக்டரும், எண்ணெய்வித்துகள் 1,049 ஹெக்டரும், பருத்தி 255 ஹெக்டரும், கரும்பு 1,920 ஹெக்டரும், தோட்டக்கலைத் துறை பயிர்களான பழப்பயிர்கள் 19,162 ஹெக்டரும் காய்கறி வகைப் பயிர்கள் 7,097 ஹெக்டரும், மலைத்தோட்ட பயிர்கள் 33,727 ஹெக்டரும், நறுமணப்பயிர்கள் 3,226 ஹெக்டரும், மலர்ப்பயிர்கள் 571 ஹெக்டர் பரப்பிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

வேளாண்மை விரிவாக்க மையங்களில் நெல் விதை 81.7 மெ.டன், சிறுதானியங்கள் 6.6 மெ.டன்னும் (கம்பு கோ 10, குதிரைவாலி MDU 1) பயறு வகை விதைகள் (தட்டை பயிறு, பாசிப்பயிறு மற்றும் உளுந்து) 30 மெ.டன்னும், எண்ணெய்வித்துப் பயிர் விதைகள் (நிலக்கடலை) 9 மெ.டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் நடப்பு பருவ சாகுபடிக்குத் தேவையான உரங்களான யூரியா 1106 மெ.டன்னும் (MFL, Spic & IFFCO), DAP 376 மெ.டன்னும் (Green star, IPL & IFFCO) பொட்டாஷ் 463 மெ.டன் (IPL) மற்றும் கலப்பு உரங்கள் 3,338 மெ.டன்னும் (Fact, GFL, CIL, IFFCO) தனியார் நிறுவனங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தேவையான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

தேனி மாவட்டத்தில் நெற்பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15 கடைசி தேதி ஆகும். நெல் பயிருக்கு ஒரு ஏக்கருக்கான காப்பீட்டுத் தொகை ரூ. 38,038/ அதற்கான பிரிமியமாக ரூ. 570.57/ செலுத்த வேண்டும். மேலும் மக்காச்சோளத்திற்கு பயிர் காப்பீடு செய்ய டிசம்பர் 30 கடைசி தேதி ஆகும். மக்காச்சோளம் ஒரு ஏக்கருக்கான காப்பீட்டு தொகை ரூ.29,000/ ஆகும். ஒரு ஏக்கருக்கு பிரிமியம் தொகையாக விவசாயிகள் ரூ.435/ செலுத்த வேண்டும். எதிர்பாராத பயிர் சேதம் இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் மகசூல் இழப்பு ஆகியவற்றிலிருந்து வருமானத்தைக் காத்துக் கொள்ள விவசாயிகள் உடனே பயிர் காப்பீட்டு திட்டத்தில் சேர்ந்து பயனடைய கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வேளாண் அடுக்ககம் திட்டத்தில் வேளாண்மைத்துறை சார்ந்த அரசின் நலத்திட்டங்களை பெறுவதற்கு ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தனித்துவமான அடையாள எண் வழங்கப்பட்டு வருகிறது. தேனி மாவட்டத்தில் PM Kisan நிதியினை தொடர்ந்து பெறும் 27,320 பயனாளிகளில் இதுவரை 21,450 விவசாயிகள் மட்டுமே பதிவுகள் மேற்கொண்டுள்ளனர். இன்னும் 5,870 பயனாளிகள் அடையாள எண் பெறவில்லை. PM Kisan நிதியினை தொடர்ந்து பெற விரும்பும் விவசாயிகளும் உடனடியாக சம்பந்தப்பட்ட வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்களை தொடர்பு கொண்டு பதிவுகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தொடர்ந்து அதிக மழையினாலும் போதிய தரைமட்ட வடிகால் இல்லாத சூழ்நிலையில், வயலில் மழை அல்லது வெள்ள நீர் அளவுக்கு அதிகமாக பல நாள் தேங்கி நின்று பயிரின் வளர்ச்சியை பாதிக்கின்றது. எனவே விவசாயிகள் முடிந்தவரை தங்கள் வயலில் தேங்கியுள்ள மழை நீரினை வடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

விவசாயிகளால் வைக்கப்பட்ட கோரிக் கைக்கு சம்மந்தப்பட்ட துறைகள் மூலம் உரிய நடவ டிக்கைள் எடுக்க ப்பட்டு விவசாயிகளுக்கு உரிய பதில்கள் வழங்கப்படும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து, தோட்டக்கலைத்துறை மூலம் மானிய விலையில் காய்கறி விதைத் தொகுப்புகளை விவசாயிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

முன்னதாக, வேளாண்மை பொறியியல் துறை மூலம் விதைப்பு முதல் அறுவடை வரை மற்றும் அறுவடை பின்சார வேளாண் உபகரணங்கள் மானிய விலையில் வழங்கப்படுவதை விவசாயிகளுக்கு விளக்கப்படங்களுடன் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், மழை நீர் வடியும் போது நீருடன் மண்ணில் உள்ள தழைச்சத்து, சுண்ணாம்பு, மக்னீசியம் போரான், கந்தகம் மற்றும் சாம்பல் சத்து ஆகியவை கரைந்து வெளியாகிவிடும் இதனால் சத்துக்கள் பற்றாக்குறை ஏற்படும். மழைநீர் வடிந்ததும் இளம் பயிர்களுக்கு தழைச்சத்து உரத்தை அம்மோனியா வடிவில் இடவேண்டும். யூரியா இடுவதாக இருந்தால் யூரியா உடன் ஜிப்சம் மற்றும் மணல் ஆகியவற்றை 1:3:5 என்ற விகிதத்தில் கலந்து ஒரு நாள் வைத்திருந்து மறுநாள் இட வேண்டும். டிஏபி உரம் இரண்டு சதவீத கரைசல், சாம்பல் சத்து மற்றும் நுண்ணூட்ட சத்துக்களைஇலைவழியாக தெளிக்கலாம். மேலும் விபரங்களுக்கு அந்தந்த வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகலாம்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ஐ.மகாலட்சுமி, வேளாண்மை இணை இயக்குநர் சாந்தாமணி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) வளர்மதி, உதவி வனப்பாதுகாவலர் .சாய்சரண் ரெட்டி, இ.வ.ப., மற்றும் அனைத்துத் துறை மாவட்ட அளவிலான அலுவலர்கள் மற்றும் ஏராளமான விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



# பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பில் 05/10/2025 அன்று ஆயுத பூஜை விழா

பம்மல், அக்.26-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மல் அன்னை தெரேசா மாற்றுத்திறனாளி வெல்பேர் டிரஸ்ட் சார்பில் 05/10/2025 அன்று ஆயுத பூஜை விழா கொண்டாடப்பட்டது பம்மலில் உள்ள அலுவலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் ஆயுத பூஜையில் பரிசு பொருட்கள், இனிப்புகள் மாற்றுத்திறனாளி நிர்வாகிகளுக்கும் உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் டி.கே.கண்ணன், அன்னை லதா ரூட் லேப் டிரஸ்ட் நிறுவினர் கௌரி ஷங்கர் பிசியோதெரபிஸ்ட் மேலும் அறக்கட்டளையின் இயக்குனர் பம்மல் பி.கவிதா, தலைவர் பம்மல் கலா, கௌரவ தலைவர் அருணகிரி ஐயா, செயலாளர் எஸ்.தேவி அனகாபுத்தூர் கிளை செயலாளர் சரவணன் குரோம்பேட்டை கிளைச் செயலாளர் திருநாவுக்கரசு, கீரப்பாக்கம் கிளை செயலாளர் தனசேகர், வடசென்னை கிளைச் செயலாளர் சுமித்ரா மற்றும் நமது அறக்கட்டளை உறுப்பினர்கள் பெற்றோர்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



■ மதுரை மாநகராட்சி அனுப்பானடி பகுதியில் உள்ள குடிநீர் குழாயில் ஏற்பட்ட உடைப்பை மாநகராட்சி பணியாளர்களால் விரைந்து பணிகள் மேற்கொண்டு சரிசெய்யப்பட்டது.



■ செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 4வது மண்டலத்திற்கு உட்பட்ட 54வது வார்டு பாப்பன் கால்வாயின் சுவர் மழையின் காரணமாக விழுந்ததை தொடர்ந்து மாநகராட்சி ஊழியர்கள் மூலம் சரி செய்யும் பணியை 4வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் டி.காமராஜ் அவர்கள் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு விரைந்து அப்புறப்படுத்த மாநகராட்சி ஊழியர்களுக்கு உத்தரவிட்டார் உடன் மாமன்ற உறுப்பினர் பி.புகழேந்தி, கழகப் பேச்சாளரும் தாம்பரம் மாநகர விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் எஸ்.ஜி.கருணாகர பாண்டியன் மற்றும் நலச்சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

# தென்காசி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் உளுந்து, பாசிப்பயறு, பருத்தி, மக்காச்சோளம், நெல் II ஆகிய பயிர்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் தகவல்

தென்காசி, அக்.26-

தென்காசி மாவட்டத்தில் நடப்பு பருவத்தில் பிரதம மந்திரி பயிர் காப்பீடு திட்டத்தில் உளுந்து, பாசிப்பயறு, பருத்தி, மக்காச்சோளம், நெல் II ஆகிய பயிர்களுக்கான பதிவுகள் நடைபெற்று வருகின்றன. பிரீமியம் செலுத்தி விவசாயிகள் பதிவு செய்ய உளுந்து, பாசிப்பயறு பயிர்களுக்கு நவம்பர் 15 கடைசி நாளாகவும், பருத்தி, மக்காச்சோளம் பயிர்களுக்கு நவம்பர் 30 கடைசி நாளாகவும், நெல் பயிருக்கு டிசம்பர் 16 கடைசி நாளாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஒரு ஹெக்டேர் பயிரினை காப்பீடு செய்ய விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரீமியம் தொகை உளுந்து பயிருக்கு ரூ.629.85 எனவும், பாசிப்பயறு பயிருக்கு ரூ.467.99 எனவும், மக்காச்சோளம் பயிருக்கு ரூ.822.51 எனவும், பருத்தி பயிருக்கு ரூ.1447.11 எனவும், நெல்மிமி பயிருக்கு 1333.80 எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இயற்கை சீற்றங்களால் வருவாய் இழப்பு ஏற்படுவதில் இருந்து விவசாயிகளை பாதுகாக்க இத்திட்டம் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் அறிவிக்கை செய்யப்பட்ட அலகுகளில் உரிய காலத்தில் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் இறுதி நாளுக்கு முன்னதாகவே பிரீமியம் செலுத்தி இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதியின் வேளாண்மைத்துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161